**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 28.08.2025**
**OS. No. 102/2014**
**வழக்கு சாட்சி PW.1–ஈஸ்வரி , க/பெ.ரங்கநாதன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என் கணவர் இறந்துவிட்டதால் சொத்தில் அவரது பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என் கணவரின் அண்ணன் வாரிசுகள் மீது தாக்கல் செய்துள்ளோம். அவர்கள் பெயர்கள் பூங்காவனம், மல்லிகா, சாந்தி மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன், அவர்களது பெயர் தெரியவில்லை. இதற்கு முன்பு இதே நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்த வழக்கின் எண் என்னவென்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கறிஞர் திரு. குமாரசாமி அவர்கள் மூலம் தாக்கல் செய்தோம். அந்த வழக்கில் நாங்கள் என்ன பரிகாரம் கேட்டிருந்தோம் என்றால் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தான் கேட்டிருந்தோம். எங்கள் வழக்கறிஞர் குமாரசாமி அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டதால், அவரது மனைவி எங்கள் வழக்கு கோப்புகளை எங்களிடம் கொடுத்துவிட்டார். அதன் பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்தோம். நான் தாக்கல் செய்த முந்தைய வழக்கு என்ன ஆயிற்று என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. தெரியாமல் தான் மேற்கண்ட முந்தைய வழக்கின் தீர்ப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

2) நாங்கள் ஏற்கனவே அ.வ.எண்.213/2005 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் இந்த பிரதிவாதிகளை 6, 7 வருடங்களாக அலக்கழித்துவிட்டு, 21.11.2011 ல் அந்த வழக்கை வாபஸ் பெற்று, புதிய வழக்கு தாக்கல் செய்வதாக சொல்லி மனு தாக்கல் செய்து, அதன் மீது உத்தரவு பெற்று அதன் பிறகு மூன்று வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றும், எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்த உறவுமுறையும் இல்லை என்றும், என் கணவர் பெயரே

தவறாக வழக்கில் குறிப்பிட்டுள்ளோம் என்றும், அந்த தவறான பெயரை பயன்படுத்தி பிரதிவாதிகள் எங்கள் உறவினர்கள் என்று பொய்யாக சொல்லி 2014 ல் இந்த வழக்கை தாக்கல் செய்து மீண்டும் பிரதிவாதிகளை அலக்கழிக்கிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்களோ, அதை தான் முந்தைய வழக்கிலும் தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரியல்ல. ரங்கநாதனின் மனைவி நான் தான் என்று நிரூபிக்க முடியாததால் தான் மேற்கண்ட முந்தைய வழக்கை வாப்ஸ் பெற்றுவிட்டோம் என்றும், அதே வழக்கு மூலத்தை வைத்து பிரதிவாதிகளை நீதிமன்றத்திற்கு வரவழைத்து வீண் சிரமத்திற்கு ஆளாக்கி வருகிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 15.09.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.